

# தஞ்சைப் பெரியகோயில்

# THANJAI RAJARAJESVARAM

Dr. KUDAVAYIL BALASUBRAMANIAN

# தஞ்சைப் பெரியகோயில்

## (இராஜராஜேச்சரம்)

டாக்டர் குடவாயில் பாலசுப்ரமணியன்
எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,

அஞ்சனா பதிப்பகம்,
6, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007

விலை ரூ. 25

# தஞ்சாவூர்

சோழநாடு என்றும் சோழமண்டலம் என்றும் அழைக்கப்பெற்ற ஒரு பரந்த நாட்டின் தலைநகரமாக விளங்கிய ஊரே தஞ்சையாகும். தண்+செய் என்பதே தஞ்சையாயிற்று. குளிர்ந்த நிலப்பரப்பு என்பதே இதன் பொருள். காவிரி நதியின் புதுப்புனலால் வளம் பெற்ற ஊர் என்பதால் (தண்+செய்+ஊர்) தஞ்சாவூராயிற்று.

இவ்வூர் பற்றிய மிகத் தொன்மையான குறிப்புகள் திருச்சிராப்பள்ளி மலையுச்சியில் காணப்பெறும் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் (கி.பி. 555 - 590) கல்வெட்டிலும், திருநாவுக்கரசர் பாடிய திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்திலும் உள்ளன. நாவுக்கரசர் காலத்தில் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டு) இவ்வூரில் ''தஞ்சைத் தளிக்குளத்தார் கோயில்" என்ற சிவாலயம் இருந்து சோழர்காலத்திற்குப் பின்பு அழிந்துள்ளது. பல்லவர்களின் கீழ் குறுநில மன்னர்களாய்த் திகழ்ந்த முத்தரையர்களின் தலை நகரமாகவும் இவ்வூர் இருந்துள்ளது. செந்தலை எனும் ஊரில் உள்ள கல்வெட்டுப் பாடல்களில் “தஞ்சைச் செம்புல நாடு” பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. பாண்டியன் மாறஞ்சடையனின் ஆடுதுறைக் கல்வெட்டு (கி.பி. 711) “தஞ்சை நாடு” பற்றிக் குறிப்பிடுகிறது.

ஏறத்தாழ கி.பி. 850 இல் விஜயாலய சோழன் முத்தரைய மன்னன் ஒருவனை வென்று, தஞ்சையைக் கைப்பற்றி, சோழ நாட்டின் தலைநகரமாக ஆக்கினான். அப்போது நிசும்பசூதனி என்ற காளி கோயிலையும் தோற்றுவித்தான். இக்கோயில் தற்போது தஞ்சாவூர்க் கீழவாசலில் பூமால் இராவுத்தன் கோயில் தெருவில் “வடபத்ரகாளி” என்ற பெயரில் திகழ்கின்றது.

விஜயாலய சோழனில் தொடங்கி ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன், ஆதித்த கரிகாலன், மதுராந்தக உத்தமசோழன், இராஜராஜன், இராஜேந்திரன் (இவனது ஆட்சியின் முதல் 10 ஆண்டுகள்) ஆகிய பெருமன்னர்கள் காலம் வரை 176 ஆண்டுகள் தஞ்சை சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கிற்று. அப்போது இப்பேரரசு வடக்கே துங்கபத்திரை ஆறு, வடகிழக்கே ஒரிசா மாநிலத்துக் கலிங்கம், கிழக்கே வங்கக்கடல், தெற்கே பன்னீராயிரம்

எனும் லட்சத்தீவு, மாலத்தீவு வரை விரிந்து பரவி இருந்தது. இவ்வளவு பரந்த ஒரு நிலப்பரப்பின் தலைநகரமாகத் தஞ்சை விளங்கியது என்பதும் இவ்வூரின் தனிச் சிறப்புகளில் ஒன்றாகும்.

சோழர் காலத்திற்குப் பிறகு கி.பி. 1218 இல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் படையெடுப்பால் தஞ்சை நகரம் முழுமையாக அழிந்தது. சோழன் அரண்மனை தரைமட்டமாக இடிக்கப்பெற்றது. பின்னர் கி.பி. 1311 இல் டெல்லியிலிருந்து வந்த மாலிக்காபூரின் பெருஞ்சூறையாடலால் எஞ்சியிருந்த கோயில்களும் சிதைந் தழிந்தன. தஞ்சைப் பெரியகோயிலும் இத்தாக்குதலுக்கு இலக்காகியது.

கி.பி. 1343 இல் பாண்டியமன்னன் பெருமாள் ஸ்ரீவல்லப தேவரின் தளபதி தொண்டைமானார் எனும் சாமந்தநாராயணன் தஞ்சையில் ஒரு புதிய ஊரை அமைத்து, திருமால் கோவிலும் எடுப்பித்தான். சாமந்தநாராயணச் சதுர்வேதிமங்கலம் எனும் அவ்வூரே இன்றைய தஞ்சையின் சாமந்தான் குளமும், யோகநரசிம்மர் கோயிலும் அடங்கிய கொண்டிராஜபாளையம் எனும் பகுதியாகும்.

பாண்டியர்களுக்குப் பின்பு விஜயநகர ஆட்சிக்குட்பட்ட தஞ்சாவூர் கி.பி. 1535 லிருந்து 1675 வரை நாயக்க மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது. 1675 லிருந்து 1800 வரை மராட்டியர்களின் அரச பீடமாக விளங்கிய தஞ்சையை ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியார் கைப்பற்றி ரெசிடென்ட் எனும் அலுவலர்களை நியமித்து ஆட்சி புரிந்தனர். 1947 இல் சுதந்திரம் பெற்ற பின்பு இந்தியக் குடியரசின் ஒரு பகுதியாகச் சிறந்து விளங்குகிறது.



சோழர் அரசு முத்திரை



# இராஜராஜன்



சோழப்பெருமன்னன் சுந்தர சோழனுக்கும் திருக்கோவலூர் மலையமான் குலத்துதித்த வானவன் மாதேவிக்கும் இரண்டாம் மகனாகப் பிறந்தவன் அருண்மொழி எனும் இராஜராஜனாவான். ஆதித்த கரிகாலன் எனும் மூத்தோன் கொலையுண்டு இறந்த பிறகு நாட்டுமக்கள் அனைவரும் இளைஞன் அருண்மொழியே முடி சூட ஏற்றவன் என விரும்பினர். அப்போது தனது சிறிய தந்தை மதுராந்தக உத்தம சோழருக்குத் தானே ஆளவேண்டும் என்ற விருப்பம் இருந்ததை அறிந்த அருண்மொழி, அவர் விருப்பப்படியே அவரை அரியணையில் அமரச் செய்தான், அவரிருந்தவரை ஆட்சியை மனத்தாலும் நினைக்காமல் இருந்தான்.

மதுராந்தக உத்தம சோழர் 15 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அப்போது அருண்மொழி இளவரசாக இருந்தான். கி.பி. 985 இல் மதுராந்தக உத்தமசோழர் மறைந்தபிறகு சோழப் பேரரசனாக மணிமுடி சூடினான். முடிசூட்டு விழாவின் போது "இராஜராஜன்" என்ற சிறப்புப் பெயரைச் சூடிக் கொண்டான்.

இளம் வயதிலேயே தாய், தந்தையரை இழந்த இராஜராஜன் தன் பெரிய பாட்டி செம்பியன் மாதேவியார், தமக்கை குந்தவைப் பிராட்டியார் ஆகியோர் அரவணைப்பில் பண்புடையப் பெருமகனாக வளர்ந்தான்.

இராஜராஜனுக்குப் பல மனைவியர் இருந்தனர். இவர்களில் தந்திசக்திவிடங்கி எனும் லோகமாதேவியே பட்டத்தரசியாக விளங்கியவர். மாமன்னனுக்கு வானவன் மாதேவியின் மூலம் பிறந்த ஒரே மகன் மதுராந்தகன் எனும் இராஜேந்திர சோழனாவான். இவனுக்கு இரண்டு தங்கையர்கள் இருந்தனர். மூத்தவள் மாதேவ அடிகள்,

இளையவள் குந்தவை. இராஜராஜன் தன் பாட்டி செம்பியன் மாதேவியார் நினைவாக ஒரு பெண்ணுக்கு மாதேவி அடிகள் என்றும், சகோதரி குந்தவைப் பிராட்டியார் நினைவாக மற்றொரு பெண்ணுக்குக் குந்தவை என்ற பெயரிட்டதோடு சிறியதந்தை மதுராந்தக உத்தமசோழர் நினைவாக மகனுக்கு மதுராந்தகன் என்றும் பெயரிட்டு மகிழ்ந்தான்.

மணிமுடி சூடிய இராஜராஜன் பல்லவர் ஆட்சியில் போர்களின் மிகுதியால் தமிழகத்தின் செல்வ வளங்கள் எல்லாம் சீரழிந்ததை உணர்ந்தான். ஒரு நாடு செழிக்க வேண்டுமெனில் அந்நாடு போர்க்களமே காணாமல் இருக்க வேண்டும் என்பதனை உணர்ந்து, நட்புக்கரம் நீட்டினான். எதிர்த்தவர்களை வென்று தன்னடிப்படுத்தி, அவர்களால் மேலும் போர் தொடராதவாறு தன் படைகளையும், தானைத் தலைவர்களையும் அந்நாடுகளில் நிலையாய் இருக்குமாறு செய்தான். இதனால் சோழநாட்டிற்குள் போர் கிடையாது. செல்வ அழிவு கிடையாது. மாறாகப் பெருஞ்செல்வம் குவிந்தது. மக்கள் வாழ்க்கை அமைதியாக இருந்தது. கவின்கலைகள் வளர்ந்தன. சைவத்தின்பால் ஏற்பட்ட ஈடுபாடு காரணமாகச் 'சிவபாதசேகரன்" எனப்பட்டம் சூடி மகிழ்ந்தான்.

### இராஜராஜனின் பெரு வெற்றிகள்

தன் தூதனைச் சிறையிலிட்ட சேரமன்னன், பாஸ்கர ரவிவர்மனைத் திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள காந்தளூர் எனும் இடத்தில் வெற்றிகண்டதோடு அவனது கடற்படையைக் கைப்பற்றியதும் இவனது குறிப்பிடத்தக்க வெற்றியாகும். இவ்வெற்றியைக் குறிப்பிடும் வண்ணம் "கேரளாந்தகன்" (கேரள மன்னனுக்கு இயமன் போன்றவன்) என்ற சிறப்புப் பட்டம் சூடி மகிழ்ந்தான்.

வேங்கிநாடு எனும் கீழைச் சாளுக்கியர்களின் நாடு (ஆந்திரமாநிலம்) இராஷ்டிரகூடர்களின் கங்கபாடி எனும் மைசூர் பகுதி, நுளம்பர்கள் ஆட்சிசெய்த நுளம்பபாடி எனும் பெங்களூர், பெல்லாரி பகுதிகள், குடகுநாடு, சேரநாட்டுக் கொல்லம், ஓரிஸ்ஸா மாநிலத்துக் கலிங்கம், இலங்கைத் தீவான ஈழமண்டலம், மேலைச் சாளுக்கியர்களின் இரட்டபாடி எனும் வட கர்நாடகம், மகராட்டிரம் போன்ற மாநிலங்கள்,



அரபிக்கடலிலுள்ள லட்சத்தீவு, மாலத்தீவு போன்ற தீவுகள் பாண்டியநாடு ஆகியவை அனைத்தும் இப்பெருமன்னனால் வெற்றி கொள்ளப்பெற்றன.

### கச்சிப்பேட்டுப் பெரியதளி


காஞ்சி மாநகரில் இராஜசிம்ம பல்லவனால் கட்டப்பெற்ற கயிலாசநாதர் கோயிலின் பேரழகில் இராஜராஜன் பெரிதும் மயங்கி அக்கோயிலைக் "கச்சிப்பேட்டுப் பெரியதளி" என்று போற்றி மகிழ்ந்தான். இக்கோயில் அவனது உள்ளத்தில் ஓர் எழுச்சியைத் தூண்டியது. அதன் விளைவால் தஞ்சையில் இராஜராஜீச்சரம் எனும் பெருங்கோயில் எழுந்தது.

இதே கோயிலில் உள்ள இராஜேந்திர சோழனின் கல்வெட்டு ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடையார் கோயில் என்று குறிப்பிடுகிறது. "இராஜராஜேச்சரம்" எனும் பெயர் இலக்கணப்படிச் சரியாயினும் "இராஜராஜீச்சரம்" என்றுதான் கல்வெட்டுக்களில் இராஜராஜன் குறிப்பிடுகின்றான். பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் எனும் ஊரில் இக் கற்கோயிலை எடுப்பித்தேன் என்று இராஜராஜனே கல்வெட்டுக்களில் கூறுவதையும் இக்கோயிலில் காணலாம்.


தஞ்சைப் பெரியகோயிலை உருவாக்கிய கட்டடக் கலைஞனின் பெயர் வீரசோழன் குஞ்சரமல்லனான ராஜராஜப் பெருந்தச்சன் என்பதாகும். மதுராந்தகனான நித்தவிநோதப் பெருந்தச்சன், இலத்திசடையனான கண்டராதித்தப் பெருந்தச்சன் என்ற இரண்டு தச்சர்களும் குஞ்சரமல்லனின் பெரும் பணிக்குத் துணை நின்றவர்களாவர்.

இராஜராஜனின் பட்டதரசி லோகமாதேவியைத் தவிர சோழமாதேவி, திரைலோக்கியமாதேவி பஞ்சவன்மாதேவி அபிமானவல்லி, இலாடமாதேவி, பிருதிவிமாதேவி, மீனவன்மாதேவி, வீரநாராயணி, வில்லவன்மாதேவி, வானவன்மாதேவி என்ற 10 தேவியர்களும் அம்மன்னவனுக்கு மனைவியராகத் திகழ்ந்தனர். இவர்களும் தஞ்சைக் கோயிலுக்கு பெரும் தொண்டாற்றியுள்ளனர்.

கி.பி. 985 இல் முடிசூடிய இம்மன்னவன் 1012 இல் இராஜேந்திர சோழனுக்கு முடிசூடி விட்டு 1014 இல் மறைந்தான். இவன் எடுத்த தஞ்சை இராஜராஜீச்சரம் ஒரு வழிபாட்டுத்தலம் மட்டுமன்று. இது தமிழக வரலாறு, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவை பொதிந்து திகழும் பெட்டகமும் ஆகும்.




ராஜராஜேஸ்வரம் எனும் ஸ்ரீவிமானமும் நந்தி மண்டபமும்




சரபோஜி வாயிலும் கேரளாந்தகன் திருவாயிலும்






பெரிய கோயில் வரைபடம்

# தஞ்சைப் பெரிய கோயில்



கோட்டை வாயிலோடு கோயிலின் தோற்றம்

தஞ்சைப் பெரிய கோயில் என்றும், இராஜராஜீச்சரம் என்றும் அழைக்கப்பெறும் இக்கோயில் வடமொழியில் பிரகதீசுவரர் ஆலயம் என அழைக்கப் பெறுகின்றது. தஞ்சையின் சிறிய கோட்டை வளாகத்துள் சிவகங்கைக் குளம், பூங்கா ஆகியவற்றின் அருகே திகழ்கின்றது. இக்கோட்டைக்கு வெளியே அகழி சூழ்ந்து காணப்பெறுகின்றது. தென்புற அகழி சென்ற நூற்றாண்டில் வெட்டப்பெற்ற புது ஆற்றுடன் (கல்லணைக் கால்வாய்) இணைந்து திகழ்கின்றது.

கோட்டைக்கு இரண்டு வகையான சுற்றுச் சுவர்கள் கொத்தளங்களோடு உள்ளன. இந்த அகழி, கோட்டை ஆகியவை தஞ்சை நாயக்க மன்னன் செவ்வப்பநாயக்கரால் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் கட்டப் பெற்றவையாகும். கிழக்கு வாயிலாகத் திகழும் கோட்டைச் சுவர் வாயிலும் அதன் வளைவு மண்டபத்தில் காணும் சுதைச் சிற்பங்களும் தஞ்சை மராட்டிய மன்னர்களால் அமைக்கப் பெற்றவையாகும்.


இவ்வாயிலை அடுத்து 5 அடுக்குகளுடன் கேரளாந்தகன் திருவாயில் எனப்படும் கோபுரமும், தொடர்ந்து 3 அடுக்குகளுடன் இராஜராஜன் திருவாயிலும் உள்ளன. உள்மதிலில் இவ்வாயிலைத்



தவிரத் தென்புறம் இரண்டும், மேற்கில் ஒன்றும், வடபுறம் ஒன்றுமாக 4 வாசல்கள் உள்ளன. உள் மதிலுடன் இணைந்து திருச்சுற்று மாளிகை எனும் சுற்று மண்டபமும், பரிவார ஆலயங்களும் உள்ளன. 212 அடி உயரமுடைய ஸ்ரீவிமானம் மண்டபங்களோடு பெருங்கோயிலாகக் காட்சி தருகின்றது.

## கேரளாந்தகன் திருவாயில்

இக்கோயிலில் உள்ள கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் திருவாயில் கோபுரமான இதுவேயாகும். இதன் வாயிலில் நிறுத்தப்பெற்றுள்ள இரண்டு நிலைக்கால்கள் அதிசயிக்கத்தக்க சிறப்பு வாய்ந்தவையாகும். 4 அடி நீளம் 3 அடி அகலம், 40 அடி உயரத்துடன் ஒரே கல்லில் ஆன இந்த இரண்டு நிலைக்கால்களும் தஞ்சாவூரிலிருந்து குறைந்த பட்சம் 80 கிலோமீட்டர் தொலைவிலிருந்து கொண்டு வரப்பெற்று இங்கு நிறுத்தப் பெற்றுள்ளது வியப்பை அளிப்பதாகும். கோபுரத்தில் காணப்பெறும் சுதை உருவங்களில் சோழர்காலச் சிற்பங்கள்




மகாசதாசிவமூர்த்தி

சில உள்ளன. மற்றவை பிற்காலத் திருப்பணிகளின் போது புதுப்பிக்கப் பெற்றவை. இவற்றுள் குறிப்பிடத்தக்க சோழர் காலச் சுதை உருவம் மகாசதாசிவ மூர்த்தியின் உருவாகும். ஐந்து தலைகள் 10 கரங்களுடன் பத்ம ஆசனத்தில் அமர்ந்துள்ள இவ்வுருவம் ஓர் அரிய சிற்பமாகும்.

இராஜராஜன் கி.பி. 988 இல் கேரள மன்னன் பாஸ்கர ரவிவர்மனுடன் போர்தொடுத்து வெற்றி பெற்றதன் நினைவாகச் சூடிய "கேரளாந்தகன்" என்ற விருதுப்பெயரினையே இக்கோபுரத்திற்கு சூட்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## இராஜராஜன் திருவாயில்

இக்கோயிலின் இரண்டாம் கோபுரமாகிய இராஜராஜன் கோபுர வாயிலிலும் 40 அடி உயரமுள்ள இரண்டு ஒற்றைக்கல் நிலைக்கால்கள் உள்ளன. கோபுரத்தின் கிழக்குப் பகுதியில் 18 அடி உயரமுடைய ஒரே கல்லால் ஆன இரண்டு துவாரபாலர் சிற்பங்கள் மிக அபூர்வமானவையாகும். இக்கோபுரத்தின் வெளிப்புற அதிஷ்டானத்தில் (துவார பாலகருக்குக் கீழே பீடப்பகுதியில்) சிவபுராணக் கதைகளின் சிற்பத் தொகுப்புகள் உள்ளன.



ராஜராஜன் திருவாயில்

இங்கு,

1. திரிபுர தகனத்திற்குப் பின்பு மூன்று அசுரர்களுக்கு அருளும் காட்சி
2. சண்டீசர் கதைத் தொகுப்பு
3. மார்க்கண்டேயன் கதைத் தொகுப்பு
4. சிவபெருமான் திருமணக்காட்சி

ஆகியவை வாயிலுக்குத் தென்புறமும், வடபுறத்தில்

1. வள்ளி திருமணக் காட்சி



2. அர்ச்சுனனுக்குப் பாசுபதம் அளித்த காட்சித் தொகுப்பு
3. மலர் அம்பு தொடுத்த காமனை எரித்த காட்சி
4. கண்ணப்பர் கதைத் தொகுப்புக் காட்சிகள்

ஆகியவை உள்ளன. இவை அரிய சிற்பங்களாகும்.

அருணகிரிநாதர் இக்கோயிலுக்கு வந்தபோது முருகன் கோயில் தனியாக உள்ளே இருக்கவில்லை. அவர் இக்கோபுரத்திலுள்ள முருகப்பெருமானையே

"தஞ்சை மாநகர் இராஜகோபுரத் தமர்ந்த பெருமாளே" என்று பாடியுள்ளார்.

இதே கோபுரத்தின் உட்புறம் தென்திசையில் நாகராஜர் கோயிலும் வடபுறம் கீழ்த்திசைத் தெய்வமான இந்திரன் கோயிலும் உள்ளன. இந்திரன் கோயிலின் உள்ளே தற்போது தெய்வத் திருமேனி இல்லை.

நாகராஜர் கோயிலை ஒட்டி உள்ள கோபுர அதிஷ்டானத்தில் திரிபுரதகனக் காட்சியின் முழுத்தொகுப்பும் உள்ளது. ஆனால் சிற்பங்கள் பல சிதைந்து விட்டன. இத்தொகுப்பில் திருமால் புத்தராகப் போதி மரத்தடியில் அமர்ந்துள்ள காட்சி உள்ளது.

இந்திரன் கோயிலை ஒட்டி உமையொருபாகன் (அர்த்தநாரி) கஜசம்ஹாரமூர்த்தி, கங்காளமூர்த்தி போன்ற பெரிய சிற்பங்கள் சற்றுச் சிதைந்த நிலையில் உள்ளதைக் காணலாம்.

## திருச்சுற்று மாளிகை

இராஜராஜன் வாயிலோடு திகழும் மதிலின் உட்புறம் நான்கு திசைகளிலும் காணப்படும் சுற்று மண்டபத்தினை இக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் திருச்சுற்று மாளிகை என்று குறிப்பிடுகின்றன. இது இராஜராஜன் காலத்தில் இரண்டு தளத்துடன் இருந்து பின்னாளில் அழிந்து,



அக்நிதேவன் கற்சிற்பம்

தற்போது ஒரே ஒரு தளத்தோடு காணப்பெறுகின்றது. இங்கு 7 திக்குகளில் சிறிய விமானங்களுடன் சிறு சிறு கோயில்கள் உள்ளன. இவை தவிரப் பல சிறிய கோயில்கள் விமானம் இல்லாமல் காட்சி தருகின்றன. மொத்தத்தில் 36 கோயில்கள் உள்ளன.

இராஜராஜன் திருவாயில் எனும் கோபுரத்தில் இந்திரன் கோயில்இருப்பதை முன்பே கண்டோம். மற்ற 7 விமானக் கோயில்களில் முறையே தென்கிழக்கில் அக்நி, தெற்கில் இயமன், தென்மேற்கில் நிருதி, மேற்கில் வருணன், வடமேற்கில் வாயு, வடக்கில் சோமன், வடகிழக்கே ஈசானன் ஆகிய எட்டுத் திசைத் தெய்வங்களுக்கு உரியனவாகும். தற்போது வருணன், அக்னி, ஈசானன் ஆகிய திருவுருவங்கள் மட்டும் சிதைந்த நிலையில் உள்ளன. எட்டு நாகங்களில் 5 நாக தெய்வங்களும், சப்தமாதரில் வராகியும் தற்போது எஞ்சி நிற்கின்றன. இவை அனைத்தும் கி.பி. 1311 இல் மாலிக்காபூரின் படை எடுப்பின் போது சிதைந்திருக்க வேண்டும்.

இத்திருச்சுற்று மாளிகையில் வடமேற்குப் பகுதியில் பரிவாராலயத்துக் கணபதியார் கோயில் உள்ளது. இது போன்றே வடதிசையில் பரிவாராலயத்து உமாபரமேஸ்வரி கோயில் உள்ளது. ஆனால் இக்கோயிலினுள் உமாதேவியின் திருமேனி தற்போது இல்லை. மற்ற பரிவாரக் கோயில்கள் அனைத்திலும் இருந்த தெய்வ உருவங்கள் சிதைந்து அழிந்துவிட்டன. பிற்காலத்தில் இச்சுற்று மண்டபம் முழுவதும் பல சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்துவிட்டனர்.


இராஜராஜன் இந்தக் கோயிலைக் கட்டும்போது, இத்திருச்சுற்று மண்டபத்தை, தன் சேனாதிபதி கிருஷ்ணன் இராமன் எனும் மும்முடிச் சோழப்பிரம்மராயன் என்பவரைக் கட்டுமாறு ஆணையிட, அதன்படி கட்டியது என்ற தகவல் இம்மண்டபத்தில் மூன்று இடங்களில் பொறிக்கப் பெற்றுள்ளது.

### நந்தி மண்டபம்

இராஜராஜன் திருவாயிலுக்கு எதிரே உள்ள 16 கால்மண்டபத்தில் மிகப்பெரிய நந்தி உள்ளது இது. 19 1/2 அடி நீளம், 8 1/4 அடி அகலம் 12 அடி உயரம் உடையதாக ஒரே கல்லில் வடிக்கப் பெற்றதாகும். இது கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசின் காலத்தில் நாயக்க



மன்னர்களால் உருவாக்கப் பெற்றதாகும். இம்மண்டபத்தில் தஞ்சை நாயக்க மன்னர்களின் உருவச்சிலைகள் உள்ளன. இம்மண்டபத்திற்குத் தென்புறம் திருச்சுற்று மாளிகையில் வடதிசை நோக்கியவாறு காணப்படும் நந்தியே இராஜராஜன் காலத்தில் இக்கோயிலுக்காக வடிக்கப் பெற்றதாகும். இது அப்போது கேரளாந்தகன் இராஜராஜன் வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இருந்தது.




நாயக்கர்கால நந்தி - கி.பி. 16ஆம் நூற்றாண்டு

இந்த நந்திக்கு அருகில் உள்ள வராகி அம்மன் இராஜராஜன் காலத்தில் திருச்சுற்று மாளிகையின் தென்பகுதியில் இருந்த சப்தமாத எனும் ஏழு தேவிகளுள் ஒருத்தி ஆவாள். மற்ற ஆறு சிற்பங்களு பின்னாளில் அழிந்துவிட்டன.

### தட்சிணமேரு எனும் ஸ்ரீவிமானம்

ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் எனும் பிரகதீசுவரப் பெருமா கோயில்கொண்டு திகழும் நெடிதுயர்ந்த ஸ்ரீவிமானத்தின் பெய தட்சிணமேரு என்பதாகும். இது தரையிலிருந்து 216 அ உயரமுடையதாகும். பீடம் முதல் ஸ்தூபித்தளம் (கலசம்) வ கருங்கற்கொண்டு கட்டப் பெற்றதாகும். இவ்வளவு உயரமான இந் விமானம் முழுவதும் உட்கூடு பெற்றது. வாயகலமான கூம்பு போன் குவளையைத் தலைகீழாகக் கவிழ்த்தது போன்ற அமைப்புடையத இந்த விமானத்தின் நிழல் தரையில் விழாது என்பது தவறா செய்தியாகும்.



பெரியகோயிலின் முழுத் தோற்றம் - நன்றி திரு அனில்கர்கரே




கருவறையின் நடுவே பெரிய லிங்கத்திருமேனி உள்ளது. இதன் உயரம் 13 அடி ஆகும். இந்த உள்அறை நான்கு திசைகளிலும் 11 அடி அகலக் கருங்கற்சுவருடையதாகும். இச்சுவருக்கு வெளிப்புறம் 6 அடி அகலத்தில் நான்கு திசைகளிலும் சுற்று அறை உள்ளது. இந்த அறையின் நான்கு திசைகளிலும் திகழும் புறச்சுவரும் உட்சுவர் போன்றே மிகப்பெரியதாகும். இது 13 அடி அகலமுடையது. இந்தச் சுற்று அறைக்கு அர்த்த மண்டபத்தில் இரண்டு வாயில்கள் இருப்பது போன்று விமானத்தின் வெளிப்பகுதியில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் மூன்று வாயில்கள் உள்ளன. இவ்வாயில்களுக்கு எதிரே உட்புறம் தென்திசையில் 9 அடி உயரமுடைய ருத்திரமூர்த்தி, மேற்கில் சந்தியாநிருத்த மூர்த்தி, வடபுறம் மனோன்மனி ஆகிய கற்சிற்பங்கள் உள்ளன. இந்தச் சுற்று அறைக்கு மேலாக இதே அமைப்பில் மற்றுமொரு சுற்று அறை உள்ளது.

கீழ்ச் சுற்று அறையின் சுவரில் சோழர்கால ஓவியங்களும், நாயக்கர்கால ஓவியங்களும் உள்ளன. மேலறையில் சிவபெருமானின் நாட்டியக் கரணச்சிற்பங்களின் தொகுதி உள்ளது. 108 கரணச்சிற்பங்களில் 80 மட்டுமே பூர்த்தியாக உள்ளன. மற்றவை செதுக்கப் பெறவில்லை.

இந்த இரண்டாம் தளத்தில் உட்புறச் சுவர்களும், வெளிப்புறச் சுவர்களும் இணைந்து ஒரு தளம் உருவாகியுள்ளது. இது 30 அடி அகலமுடையதாகும். இந்தப் பகுதியே உயர்ந்த உட்கூடு உடைய விமானத்தைத் தாங்கி நிற்கிறது. மொத்த எடை முழுவதும் உட்புறச் சுவர்களிலும், வெளிப்புறச் சுவர்களிலும் இணைந்து தாங்கப் பெறும் வலுவுடைய அமைப்பாகத் திகழும். இக்கட்டுமான நுட்பம் வியக்கத்தக்க ஒன்றாகும்.


நான்கு பட்டை வடிவில் கூம்பிச் செல்லும் விமானம் மேல்நிலையில் 26 x 26 அடி சதுரத்தளத்தை உருவாக்கி நிற்கின்றது. இத்தளம் ஒரே கல் என்பதும், 80 டன் எடையுள்ளது என்பதும் தவறான செய்திகளாகும். இத்தளம் பலகற்களின் இணைப்புக்களால் ஆனது இந்தச் சதுரத் தளத்தின் மேல் சிகரத்தின் கழுத்துப் பகுதி (கிரீவம்) உள்ளது. அதன் மேல்வட்ட அரைப்பந்து வடிவச் சிகரம் உள்ளது சிகரத்தின் உச்சியில் 12 அடி உயரமுடைய கலசம் (செம்பால்

**தட்சிணமேரு எனும்**
**ஸ்ரீவிமானம்**



விமானம் வரைபடம்

Courtesy . Francoise D Extrem e orient




Courtesy .. Francoise D Extrem e orient



**கருவறையின் அமைப்பு**




சந்தியா நிருத்தமூர்த்தி




6 அடி அகலமுடைய சாந்தாரம் எனும் சுற்றுஅறை. இவ்வறையில் தான் சோழர்கால ப்ரஸ்கோ ஓவியங்களும், நாயக்கர்கால டெம்பரா ஓவியங்களும் உள்ளன.



ருத்திரமூர்த்தி



மனோன்மனி

செய்யப்பெற்று தங்க முலாம் பூசப் பெற்றது) உள்ளது. சிகரம் உள்ள தளத்தின் நான்கு மூலைகளிலும் 1.34 மீ உயரமும் 1.40 மீ நீளமும் உடைய நான்கு நந்திகளும், வடமேற்குத் திசையில் ஓர் பூத உருவமும் உள்ளன.


**மகாமண்டபம்**

ஸ்ரீ விமானத்தின் கருவறையோடு அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவை இணைந்துள்ளன. அர்த்த மண்டபத்தின் தென்புறமும், வடபுறமும் வாயில்களும் படிக்கட்டுக்களும் உள்ளன. தென்புற வாயிற்படிகளை ஒட்டிய பகுதியில் திரிபுர அசுரர்களுடைய கதைத் தொகுதி, கிராதார்ச்சுனர்கதை, கங்காதரமூர்த்தி ஆகிய சிற்பங்கள் உள்ளன. அதுபோன்று வடபுறம் தக்கனது வேள்விச் சிற்பங்களும், சண்டீசர்கதையும் உள்ளன. தென்புற நிலைவாயிலின் மேல் "விக்கிரம சோழன் திருவாயில்" என்ற பெயர் கல்வெட்டாகக் காணப்பெறுகின்றது. வடபுற நிலைவாயிலில் அட்டமங்கலச் சிற்பங்கள் உள்ளன.

மகாமண்டபம் கருவறை ஆகியவற்றின் வெளிப்புறம் உள்ள பிறைமாடங்களில் (கோஷ்டம்) உள்ள திருவுருவங்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் திருமாலுக்குச் சக்கரம் கொடுக்கும் காட்சியும், மார்க்கண்டேயனுக்கு அருள்நல்கும் யமசம்ஹாரமூர்த்தியின் (காலகாலர்) சிற்பத் தொகுப்பும் உன்னதப் படைப்புகளாகும். கருவறையின் ஒவ்வொரு திசை வாயில்களிலும் காணப்பெறும் துவாரபாலகர்கள் சிவபெருமானின் தசாயுதபுருஷர்களான வஜ்ரதேவர், சக்திதேவர், தண்டதேவர், சூலதேவர், துவஜதேவர், அங்குசதேவர், கதைதேவர், பாசதேவர், கட்கதேவர், சக்கரதேவர் ஆகியோர் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும். மேல்நிலை பிறைமாடங்களில் வித்யேஸ்வரர், மூர்த்தீஸ்வரர், ருத்திரர்கள் ஆகியோர் உள்ளனர்.

ஸ்ரீவிமானத்தின் மேல் நிலையில் வடபுறம் காணப்பெறும் தொப்பி அணிந்த மேலை நாட்டவர் உருவம் நாயக்கர் காலத்திய சுதை உருவமாகும். இது மேலை நாட்டவர் அடிக்கடி தஞ்சைக்கு வருகைபுரிந்ததின் தாக்கத்தால் உருவாக்கப்பெற்றதாகும்.







**தேவகோஷ்ட தெய்வங்கள்**

## உட்கூடாகக் திகழும் ஸ்ரீவிமானத்தின் தத்துவம்

சிவபெருமானைச் சோமாஸ்கந்தர் சந்திரசேகர் எனப் பல நிலைகளில் வழிபடுகிறோம். இத்திருமேனிகள் மனித உருவத்தை ஒத்தவை. அடுத்த நிலையாக உருவமும் அல்லாமல், அருவமும் (உருவம் இல்லாதநிலை) அல்லாத இடைநிலையாகச் சிவலிங்க உருவை வழிபடுகிறோம். இவ்வடிவங்கள் வாயிலாக மனதிற்கு ஒரு பக்குவநிலை ஏற்படும் போது சிவமாகிய அப்பரம்பொருளின் பேராற்றலை உருவமற்ற நிலையிலேயே நம்மால் உணரமுடியும்.

பிரபஞ்சமாகத் திகழும் பரவெளி அதில் மிதக்கும் கோடானுகோடி சூரியன்கள், சந்திரன்கள், விண்மீன்கள், கோள்கள்ஆகிய அனைத்தையும் எந்த ஒரு பேராற்றல் இயக்குகின்றதோ அந்த உருவமிலா மாசக்தியே சிவமாகும். அதனை உணர்தலே பரமானந்தமாகும்.



இலிங்கத்திற்கு மேலே உள்ள ஸ்ரீவிமானத்தின் உட்கூடான வெற்றிடம் பரசிவமாகும். அதுவே ஆடவல்லானாகும்.



தில்லைப் பொன்னம்பலத்தில் பரசிவமாகத் திகழும் ஆடல்வல்ல பெருமானின் அருவ நிலையைக் காட்டுவதற்காகவே திரையை நீக்கிச் சுவரில் ஒளிரும் தங்கவில்வ இலை மாலையைச் **'சிதம்பர ரகஸ்யம்'** என்ற பெயரில் காட்டுகின்றனர்.


ஆடல்வல்லான் என்னும் நடராஜ வடிவம் உருவமற்ற பரவெளியின் பேராற்றலின் நிலையாக உள்ள வடிவமேயாகும். இங்குப் பிரபை என்பது பரவெளி. அதில் ஒளிரும் தீச்சுடர்கள் பரவெளியில் மிதக்கும் கோள்கள் விண்மீன்களின் வடிவமாகும். தாமரைப்பீடம் நமது புவி உலகம். அதில் படுத்துள்ள முயலகன் எனும் குள்ளபூதம் இந்தப் புவியிலுள்ள தீமைகளின் மொத்த உருவம். அவன் சாகவில்லை. பரமனின் காலடியில் கிடக்கும் அவன் வலிமைமிகுந்து எழ முயற்சிக்கும் போது பரமன் அவனைக் காலால் அழுத்தி எழாமல் செய்வான்.

பரசிவம் பேராற்றலின் பேரியக்கமாகத் திகழ்வதால் பரவெளியாகிய பிரபையின் மத்தியில் மிகவேகமாகச் சுழன்று ஆடுகிறான். அவனது சுழற்சியின் வேகத்தைக் காட்டுவதே விரிந்த சடைகளும், பறக்கும் இடுப்பாடையும் ஆகும். ஏந்திய கரங்களிலிருந்து வெளிப்படும் தீயும், உடுக்கையின் ஒலியும், உயிர்களை உயிர்ப்பிக்கின்றன. அவன் முயலகன் எனும் தீமையைத் தன் காலால் மிதித்த வண்ணமே அடியார்களாகிய நமக்காக மாலவனும், பிரமனும் காணமுடியாத குஞ்சித்த திருவடியைக் காட்டி, திருக்கரத்தால் அபயமளிக்கின்றான். இதுவே பிரபஞ்ச தத்துவமாகத் திகழும் பரமேசனின் வடிவமாகும்.


சேக்கிழார்பெருமான், "பெருமதில் சிறந்த செம்பொன் மாளிகையின் பிறங்கு பேரம்பலம் **மேரு**" என்று தில்லை பொன்னம்பலத்தை "மேரு" என்றே குறிக்கிறார். ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் **"தெக்கினமேரு வென்ன** பீடிகை தில்லை வனத்தமைத்த பெரிய பெருமாளை வாழ்த்தினவே" என்று கூறுகிறார். சபாபதி ஆடுகின்ற தில்லைப் பொன்னம்பலம் "தெட்சிணமேரு" ஆகும். தஞ்சைப் பெருங்கோயில் விமானத்தை தெட்சிணமேரு என்றும், தஞ்சையில் உள்ள நடராஜப் பெருமானின் வடிவத்தை 'தெட்சிணமேரு விடங்கர்' என்றும் கல்வெட்டுக்களில் இராஜராஜன் கூறுவதையும்

கொண்டு நோக்கும் போது தஞ்சை ராஜராஜீச்சரத்து ஸ்ரீவிமானத்தின் உட்கூடு பிரபஞ்சம் எனும் பேராற்றலை உணர்த்தும் பரவெளியே என்பதை நன்கு உணரலாம். இங்கு பிரகதீஸ்வரர் மட்டும் சிவ வடிவமல்ல; அவருக்கு மேலே திகழும் பரவெளியும் சிவமே என உணர வேண்டும்.


## சிவலிங்கம்




13 அடி உயரம் உடைய மகாலிங்கம்



55 அடி சுற்றளவு + 6 அடி கோமுகம் 3½ அடி உயர பீடத்துடன் உள்ள விஷ்ணு பீடம் - ஒரே கல்லால் ஆனது



55 அடி சுற்றளவு 2½ அடி உயரம் உள்ள 9 கற்களால் ஆன பிரம்ம பீடம்






தஞ்சைக் கோயிலின் வழிபாடு மகுடாகமம் அடிப்படையில் அமைந்ததாகும். மகுடாகமம் சிவலிங்க வழிபாட்டைக் கூறும் போது நவதத்துவம் என்றுரைக்கின்றது. “சிவலிங்கத் திருமேனியின் நடுவே தூணாகத் திகழும் பாணமானது மூன்று வகை அமைப்புகளுடன் திகழும். இது அடியில் நான்கு பட்டையாகவும், இடையில் எட்டுப்பட்டையாகவும், மேலாக வட்டமாகவும் இருக்கும். சதுரத் தூண்வடிவை பிரம்மனாகவும், எட்டுபட்டை வடிவை விஷ்ணுவாகவும், வட்டத்தூணை ருத்திரன், மகேசன், சதாசிவன், பரபிந்து, பரநாதம், பராசக்தி எனப் போற்றி உச்சிக்கு வரும் போது பரசிவம் எனப்பகுப்பார். பரசிவம் எனும் போது உருவமாகத் திகழும் லிங்கம் மறைந்து பரவெளியான பிரபஞ்சமே சிவமாகத் திகழும். பிரமனில் வழிபாட்டைத் துவக்கி “பரசிவ” வணக்கம் கூறி மலரஞ்சலியை முடிப்பர். இவ்வாறு நவதத்துவ வடிவமாகத் திகழும் சிவபெருமானை சிவஞானசித்தியார் “நவந்தரு பேதம் ஏகநாதனே நடிப்பன்” என்று கூறுகின்றது.

## அரிய துவாரபாலகர் சிற்பம்

இக்கோயிலின் மகாமண்டபத்துக் கிழக்கு வாயிலின் வலதுபுறம் மகாகணபதி சிலையை ஒட்டி ஒரு துவார பாலகர் சிலை 15 அடி உயரத்தில் திகழும். இவரது காலடியில் உள்ள பாம்பு ஒரு யானையை விழுங்கும் காட்சியைக் காணலாம். இவ்வாயிற் காவலர் உள்ளே இறைவன் இருக்கிறார் என்பதைச் சுட்டுவிரல் உயர்த்தி தன் ஒரு கரத்தை நீட்டி உள்ளே இறைவன் இருக்கும் திசைநோக்கிக் காட்டுவார் தன்மற்றொரு கரத்தால் தர்ஜனி முத்திரையைக் காட்டுவார். இது எச்சரிக்கை செய்வதாகும். மேலுயர்த்திய மற்றொரு கரம் விஸ்மயம் எனும் முத்திரை காட்டும். இது வியப்பின் மேலீட்டையும் உள்ளே உள்ளவர் மிகப்பெரியவர் என்பதையும் காட்டுவதாகும்.

இப்போது பாருங்கள்! பாம்பின் வாயில் உள்ள யானை உருவத்தை உண்மையான யானை அளவுக்குக் கற்பனை செய்யுங்கள் அப்போது பாம்பு எவ்வளவு பெரியதாக இருக்கும்! பாதத்தின் அளவிலிருந்து அவரது உருவத்தைக் கற்பனை செய்யுங்கள். இப்போது உங்களுக்கு 15 அடி உயரத் துவாரபாலகர் விண்ணளவு உயரத்தில் காட்சி கொடுப்பார். அவரது மேல்கரம் காட்டும் வியப்பின் அளவால் உள்ளே இருக்கும் இறைவன் எவ்வளவு பெரியவர் என்று பாருங்கள்



யானையை விழுங்கும் பாம்பு



பாம்பு விழுங்கும் யானை உருவை உண்மையான யானை உருவமாகக் கொண்டு கற்பனை செய்தால் துவாரபாலகர் உருவமும், அவன் காட்டும் பரசிவமும் எவ்வளவு பெரிது என்பது அறியலாம்.




துவாரபாலகரே வானளாவத் தெரியும் போது உள்ளே விமானத்தின் உட்கூடாகத் திகழும் அந்தப் பரமேசனின் வடிவமோ பிரபஞ்சம்தான் என்பதை நம்மால் உணரமுடியும்.

**"புரிகொள் சடையார், அடியார்க்கெளியார், கிளிசேர் மொழிமங்கை தெரியவுருவில் வைத்துகந்த தேவர் பெருமானார், பரிய களிற்றை யரவு விழுங்கி மழுங்க இருள்கூர்ந்த கரியமிடற்றர், செய்ய மேனிக் கயிலை மலையாரே"** என்ற திருஞானசம்பந்தரின் கயிலாயப்பதிகப் பாடலே இந்த துவாரபாலகர் சிலை வடிப்பதற்குச் காரணமாக இருந்திருத்தல் வேண்டும்.

## மகாமேருவிடங்கர்

தஞ்சைப் பெரியகோயிலிலுள்ள மூன்று கல்வெட்டுக்கள் (இராஜேந்திரசோழன் காலத்தவை) இராஜராஜன் எடுத்த "மகாமேருவிடங்கர்" என்ற செப்புத் திருமேனி பற்றிக் கூறுகின்றன இக்குறிப்புக் கொண்டு அது சோமாஸ்கந்த திருமேனியாக இருத்தல் கூடும் என ஆய்வாளர்கள் கருதினர். அண்மையில் இத்திருக்கோயிலின் தூண் ஒன்றில் ஒரு கல்வெட்டு இருப்பது கண்டறியப்பெற்றது. அது மகாமேருவிடங்க மூர்த்தியின் வடிவமைப்பு எவ்வாறு திகழ்ந்தது என்பதனைத் துல்லியமான அளவுகளோடு விவரிப்பதாகும். மாமன்னன் இராஜராஜனால் பொறிக்கப் பெற்ற அக்கல்வெட்டு பின்வருமாறு அத்திருமேனியின் வடிவம் பற்றிக் கூறுகின்றது.

செம்பில் வடிக்கப் பெற்ற மகாமேருபர்வதம் மூன்று சிகரங்களுடன் திகழ்வதாகவும் அவற்றில் இரு சிகரங்களில் சூரிய சந்திரர் வடிவங்களும், பர்வதத்தின் மத்தியில் உள்ள ஆசனத்தின் மேல் மகாமேருவிடங்கர் நான்கு திருக்கரத்தோடு அமர்ந்திருக்க அருகே உமாபரமேஸ்வரியின் திருவுருவம் உள்ளதாகவும், இவர்களுக்கு அருகாக நான்கு கரத்தோடு கணபதிப் பிள்ளையாரும் இரண்டு கரத்தோடு சுப்பிரமணியப் பிள்ளையாரும் இருப்பதாகவும் அக்கல்வெட்டு கூறுகின்றது. ஈசனுக்கு அருகாக விருட்சம் ஒன்றும் கந்தனுக்கு அருகாக ஒரு விரலறை உயரமுடைய செடி ஒன்றும் உள்ளதாகவும் கூறுகின்றது. ஆசனத்தருகே இடபம் படுத்திருக்க உமைக்கருகே குறளி ஒருத்தி நிற்பதாகவும் குறிப்பிடுகிறது.



கல்வெட்டில் கூறப்பெற்றுள்ள மஹாமேரு விடங்கர் செப்புத்திருமேனி வரைபடம்



மஹாமேருவாகக் காட்சியளிக்கும் தஞ்சை பெரியகோயில் ஸ்ரீவிமானம்

கல்வெட்டு காட்டும் அரிய இச்சிவமூர்த்தத்தினை வரைகோட்டு ஓவியமாகத் தந்துள்ளோம். ஓவிய வடிவில் இத்திருமேனியைக் காணும்போது மேலும் ஒரு தெளிவு கிடைக்கும். தஞ்சைப் பெரியகோயில் ஸ்ரீவிமானம் 216 அடி உயரமுடையது. அதன் வெளித்தோற்றமும் உள்தோற்றமும் இரண்டு சிவமூர்த்தங்களின் பெருவடிவேயாகும். இவ்விமானம் “தெக்ஷிணமேரு”



என்ற பெயரால் அழைக்கப் பெற்றதை இராஜராஜனின் ப கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. மேரு என்பது மலையை குறிக்கும் சொல்லாகும். சிவபெருமான் உமாபரமேசுவரியோடு உறையுமிடம் மகாமேரு எனும் பொன்மலையாகும். விண்ணகத்து விளங்கும் அம்மாமேருவின் வடிவே கயிலயங்கிரியாகும். அதனை தஞ்சையில் கல்லால் அமைத்தான் சிவபாதசேகரன், மகாமேருவுக்கு “இராஜராஜன்” - என்ற பெயருமுண்டு.

மகாமேருவாகத் திகழும் தஞ்சை இராஜராஜேச்சரத்து ஸ்ரீவிமானத்தின் கீழ்ப்புறம் சிகரங்கள் காட்டப் பெற்று அங்கு சிவனாரும் உமையும், திருப்புதல்வர்களும், தேவாதிதேவர்களும் கணங்களும் புடைசூழ அமர்ந்திருக்கும் திருக்காட்சி சுதைவடிவில் காணப்பெறுகின்றது. அங்குக் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற செப்பு திருமேனியான மகாமேருவிடங்கர் மூர்த்தத்தினை மீண்டும் காணலாம் இங்கு விமானமே மேரு பர்வதமாக விளங்குவதை உணரலாம் மகாமேரு என்பது பொன்மலையாகக் காட்சி நல்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் இராஜராஜன் ஸ்ரீவிமானத்திற்கு பொன்மேய்ந்தான். செம்பில் வடிக்கப் பெற்ற சிவமூர்த்தத்தையும் விமானத்துப் பொற்றகடுகளையும் நாம் காலவெள்ளத்தில் இழந்தபோதுங்கூட மகாமேருவிடங்கரையும் மேருவையும் தஞ்சை விமானத்தில் இன்றும் கண்டு மகிழலாம்.


மகாமேருவாகத் (தெட்சிணமேருவாக) திகழும் இவ்விமானத்தின் மேல்நிலையிலிருந்து கீழ்வரை பல்வேறு நிலைகளில் சிவமூர்த்தங்கள் விளங்குகின்றன. மேலே இரண்டாம் தளத்தில் உள்ள கோஷ்டங்களில் வித்யேச்வரர்கள் எனும் அந்தன், சூக்ஷ்மன், சிவோத்தமன் ஏகநேத்திரன், ஏகருத்திரன், திரிமூர்த்தி, சீகண்டன், சீகண்டி ஆகிய சிவ வடிவங்கள் வில்லேந்திய கோலத்தில் காணப்பெறுகின்றன இவ்வடிவங்களை இராஜராஜேச்வரர்கள் என்று நூல்கள் கூறுகின்றன அடுத்து இதே நிலையில் சிவரூபமாகத் திகழும் மூர்த்திச்வரர்களாகிய பவன், சர்வன், பசுபதி, உக்ரன், ருத்ரன், பீமன், ஈசானன், மகாதேவன் ஆகிய எண்மர் உருவங்களும், பதினொரு ருத்திரர்களின் வடிவங்களும் உள்ளன. கீழ்நிலை தேவகோஷ்டங்களில் பல்வேறு சிவ வடிவங்கள் இருப்பினும் குறிப்பிடத்தக்க வடிவங்களாக, சிவலிங்க வடிவிற்குள்

நின்றவண்ணம் திருமாலுக்குச் சக்கரம் ஈந்து அருள்பாலிக்கும் விஷ்ணு அநுக்கிரக மூர்த்தி. சிவனாரின் ஐந்துடல் மூர்த்திகளாகிய சத்யோஜாதம், அகோரம், தத்புருஷம், வாமதேவம், ஈசானம் ஆகிய மூர்த்திகளின் தனித்தனி வடிவங்களும் குறிப்பிடத் தக்கவையாகும்..

## பொற்கோயிலாகத் திகழ்ந்த பெரியகோயில்

தெட்சிணமேரு என்ற பெயரில் மாமன்னன் இராஜராஜன் எடுத்த தஞ்சைப் பெரிய கோயிலின் ஸ்ரீவிமானத்தின் மேல் செப்புத்தகடுகளைப் போர்த்தி அதன் மேல் பொன் சுருக்கினான் என்பதை அண்மையில் வெளிப்பட்ட தஞ்சைக் கோயில் கல்வெட்டொன்று விவரிக்கிறது. முன்பே பதிப்பிக்கப் பெற்ற மற்றொரு கல்வெட்டு 12 அடி உயரமுடைய கலசத்திற்கு இராஜராஜன் எவ்வளவு செம்பும் பொன்னும் கொடுத்தான் என்பதை விவரிக்கின்றது. ஆனால் இப்புதிய கண்டுபிடிப்புக் கல்வெட்டால் 216 அடி உயரமுடைய ஸ்ரீ விமானம் முழுவதும் பொன் பூசப்பெற்ற தகடுகளால் அணிசெய்யப் பெற்றுத் திகழ்ந்தது என்பதை அறிய முடிகிறது. இது தற்போது மியான்மர் (பர்மா) நாட்டு யான்கான் ஷிவிடகான் புத்தர் கோயில் எவ்வாறு பொற்தகடுகளால் விளங்குகின்றதோ அதனைப் போன்றதாகும்.

சிவபெருமான் உறைகின்ற மேருபர்வதம் எவ்வாறு பொன்மலையாக விளங்குவதோ அதுபோன்று தெட்சிணமேருவாம் தஞ்சைக் கோயிலும் பொன்மலையாக விளங்கியுள்ளது. ஒட்டக்கூத்தர்



ஸ்ரீவிமானத்திற்கு இராஜராஜன் பொன்வேய்ததைக் குறிப்பிடும் ராஜகோபுரக் கல்வெட்டு



தக்கயாகப் பரணியில் இராஜராஜன் தஞ்சையில் எடுத்த பெருங்கோயில் சிறப்பையும் தில்லைக்கோயில் அம்பலத்தின் சிறப்பையும் கூறுமிடத்து

"தாரக வண்டந் தொடுத்தணித்தார்
 தம்கிடம் போதத் தமனியத்தாற்
சீராச ராசீச்சரஞ் சமைந்த
 தெய்வப் பெருமாளை வாழ்த்தினவே
நீடிய வெண்டிசை நீழல்வாய்ப்ப
 நேரிய தெக்கின மேருவென்னப்
பிடிகை தில்லை வனத்தமைத்த
 பெரிய பெருமாளை வாழ்த்தினவே

என்ற தாழிசைகளால் போற்றுகின்றார். இங்கு தெக்கிணமேருவாம் தஞ்சை இராஜராஜேச்சரத்தை எவ்வாறு ராஜராஜன் பொன்மயமாக (மகாமேருவாக) அமைத்தானோ அதுபோன்று தில்லை அம்பலத்தை இரண்டாம் குலோத்துங்கன் அமைத்தான் என்ற அரிய செய்தியை அறிய முடிகிறது.

கருவூர்ப் புராணமும் தஞ்சைக் கோயிலைப் "பொற்கிரி" என்றே கூறுகின்றது.

**"நேமி நெடுவரை நிவந்த நிறைமணி மாமதின் கோலிப்**
**பூமியின் எண்திசை நிலைத்த பொருப்பு எனக் கோபுரம் நிறுத்தி**
**கோமிளிர் பொற்கிரி எனப் பொற்கோயில் வகுத்து ஏமகிரி**
**யாமிது என ஏர் குவிந்தாங்கு அமைத்து ஓர் மாமணிச் சிகரம்" (பாடல் - 63)**

இராஜராஜ சோழன் ஸ்ரீவிமானத்தின் மேல் மேய்ந்த பொன் பிற்காலப்படை எடுப்புகளின் போது சூரையாடப் பெற்றதால் இன்று நாம் அக்காட்சியைக் காண இயலவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்திய மண்ணில் திகழ்ந்த ஒரே பொற்கோயில் தஞ்சைப் பெரிய கோயில்தான் என்பது வரலாற்று உண்மையாகும்.

## விநாயகர் கோயில்

இவ்வாலயத்தின் தென்மேற்கு மூலையில் திருச்சுற்று மாளிகை விநாயகர் ஆலயத்திற்கு முன்பாகப் பிரகாரத்திலுள்ள விநாயகர் கோயில்

கி.பி. 1801 ஆம் ஆண்டில் (துர்மதி ஆண்டு, வைகாசி, 3ம் நாள் இரண்டாம் சரபோஜி மன்னரால் கட்டப்பெற்றதாகும்.

### கருவூரார் சன்னதி

கருவூராருக்காக எடுக்கப் பெற்ற சிறிய கோயில் மேற்கு பிரகாரத்தில் உள்ளது. இது 20 ஆம் நூற்றாண்டில் கட்டப் பெற்றது கருவூரார் சிற்பமும் புதிய படைப்பே.

### முருகன் கோயில்

பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் காணப்பெறும் முருகன் கோயில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றது. செவ்வப்ப நாயக்கர் காலத்தியதாகலாம் என அண்மைக்கால ஆய்வு முடிவுகளால் உறுதி செய்யமுடிகிறது. மிகச்சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடையது. இங்குள்ள துவாரபாலகர்; முருகன் திருமேனி, சிற்றுருவச் சிற்பங்கள், முன் மண்டபக் கொடுங்கை, கோமுக நீர்த்தொட்டி ஆகியவை நுட்பமான வேலைப் பாடுடையவை ஆகும்.

### மல்லப்ப நாயக்கர் மண்டபம்

இது முருகன் கோயிலுக்கு முன்புள்ள மண்டபமாகும். செவ்வப்ப நாயக்கரின் சகோதரர் மல்லப்பர் பெயரால் எடுக்கப்பெற்றது. இவரது உருவச்சிலை இம்மண்டபத்திலுள்ளது. இம்மண்டபத்தையும் முருகன் கோயிலையும் இணைக்கும் படிக்கட்டுகள் சரபோஜி மன்னரால் கட்டப்பெற்றவை. இதில் மராட்டிய மன்னர்களின் ஓவியங்கள் மிக அழகாகக் காணப்பெறுகின்றன.

### சண்டீசர் கோயில்

இது இராஜராஜனால் கட்டப்பெற்றது. உலகிலேயே சண்டீசருக்கு எடுக்கப்பெற்ற கோயில்களில் இதுவே மிகப் பெரியதாகும். இதன் கோட்டங்களிலும் சண்டீசர் திருவுருவங்கள் காணப்பெறுகின்றன. உள்ளே இருந்த சண்டீசர் சிற்பம் பிற்காலத்தில் மறைந்து விட்டதால், பிற்காலச் சண்டீசர் சிற்பமே அங்குள்ளது.



### அம்மன் கோயில்

நந்தி மண்டபத்திற்கு வடக்கே காணப்படும் இக்கோயில் 14 ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஒருவனால் எடுக்கப்பெற்றது. இறைவியின் பெயர் **உலகம் முழுதுமுடைய நாச்சியார்** என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளது. இக்கோயிலின் முகமண்டப விதானத்தில் (கூறைப் பகுதியில்) சரபோஜி மன்னர்கால ஓவியங்கள் காணப்பெறுகின்றன. இம் மகாமண்டபம் விஜயநகர அரசர்கள் காலத்தில் எடுக்கப் பெற்றதாகும். இங்குக் காணப்பெறும் கொடுங்கை அமைப்பு நுட்பமான வேலைப்பாடுடையதாகும்.

### மூர்த்தி அம்மன் மண்டபம்

பிரகாரத்தின் வடகிழக்கில் நடராஜப் பெருமானின் செப்புத்திருமேனி இடம் பெற்றுள்ள இம்மண்டபம் செவ்வப்ப நாயக்கரின் மனைவியின் பெயரில் எடுக்கப் பெற்றதாகும். இவ்வம்மையாரின் உருவச்சிலை தூண் ஒன்றில் வடிக்கப் பெற்றுள்ளது.

## ஓவியங்கள்

இராஜராஜ சோழன், விஜயராகவ நாயக்கர், இரண்டாம் சரபோஜி அவர் மகன் சிவாஜி ஆகியோர் காலத்து ஓவியங்கள் இக்கோயிலில் உள்ளன.

### சோழர் கால ஓவியங்கள்

கருவறையைச் சுற்றியுள்ள அறையில் காணப்பெறும் இராஜராஜன் காலத்து ஓவியங்களில் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்துள்ள தட்சிணாமூர்த்தி, சுந்தரர் திருமணத்தைச் சிவபெருமான் தடுத்தருளல், சுந்தரரும் சேரமான் பெருமாளும் ஐராவணம் எனும் யானையிலும், குதிரையிலும் கயிலை செல்லுதல், இவ்விருவரும் கயிலையில் சிவபெருமான் உமாதேவியோடு நாட்டியம் காணுதல், தில்லைப் பொன்னம்பலத்தில் இராஜராஜன் தேவியர்களுடன் ஆடல்வல்லானை வணங்குதல், தஞ்சைப் பெரியகோயிலில் இராஜராஜன் வழிபடுதல்,

திரிபுர அசுரர்களை எதிர்க்கச் சிவபெருமான் தேரேறிச் செல்லுதல், கயிலையைப் பெயர்க்கும் இராவணன், சிவபெருமானின் திருமணத்தில் திருமால் நீர்வார்க்கும் காட்சி போன்றவை காணப்பெறுகின்றன. திரிபுராந்தகர் ஓவியக்காட்சியில் அவரதுமுகத்தில் கோப உணர்வும், புன்னகை வெளிப்பாடும். ஒருங்கே திகழ்வதைக் காணலாம். மிக அரிய படைப்பு இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### நாயக்கர் கால ஓவியங்கள்

சோழர்கால ஓவியங்கள் இருக்கும் அதே சுற்று அறையில் அவற்றிற்கு மேல் நாயக்கர் கால ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. இவற்றில் சில ஓவியங்களை அகற்றிய போதுதான் மேலே கண்ட சோழர் ஓவியங்கள் வெளிப்பட்டன நாயக்கர்கால ஓவியங்களில் சிவபுராணக் கதைகள் உள்ளன. கண்ணப்பர் கதை, சமுத்திர மதனக்காட்சி. திரிபுராந்தகர் ஓவியங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

### மராட்டியர்கால ஓவியங்கள்

அம்மன் கோயில் மண்டபத்தில் இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் தேவிமகாத்மியக் காட்சிகள், தமிழ் விளக்கக் குறிப்புகளோடு தீட்டப்பெற்றுள்ளன. மேலும் சிவபெருமானுக்காக சுந்தரர் தூது செல்லல், தெய்வத் திருமணக் காட்சிகள் ஆகியவை உள்ளன.

திருச்சுற்று மாளிகையின் மேற்கு, வடக்குப் பத்திகளில் திருவாலவாய்ப் புராணக்காட்சிகள் முழுதும் தமிழ் விளக்கங்களோடு காணப்படுகின்றன.

இவ்வாறே மல்லப்ப நாயக்கர் மண்டபத்தில் மராட்டிய மன்னர்கள் அனைவரது உருவங்களும் பெயர் ஆண்டுக் குறிப்புகளோடு காணப்பெறுகின்றன. நந்தி மண்டப விதானத்தில் பூக்களும் பறவைகளும் தீட்டப்பெற்றுள்ளன. இவை அனைத்தும் கடைசி சிவாஜி மன்னர் காலத்து ஓவியங்களாகும்.




**சோழர் கால ப்ரஸ்கோ ஓவியம் (கி.பி. 1000)**



சனகாதி முனிவர் இருவர்

**சோழர் கால ப்ரஸ்கோ ஓவியம் (கி.பி. 1000)**



அரம்பையர் ஆடும் ஆடற்காட்சிகள்





**சோழர் கால ப்ரஸ்கோ ஓவியம் (கி.பி. 1000)**




சனகாதி முனிவர்

திரிபுராந்தகர்



கோபத்தை இவரது
விழிகளிலும் சிரிப்பை
(அட்டகாசம்) இவரது
உதடுகளிலும் ஒரே
நேரத்தில் காணலாம்.

## நாயக்கர் கால டெம்பரா ஓவியம் (கி.பி. 1650)



காலால் சிவலிங்கத்தை உதைத்துக் கொண்டு தன் கண்ணைப் பிடுங்கும் கண்ணப்பர்.



மராட்டியர் ஓவியம் (கி.பி. 1850)
தேவியுடன் திகழும் இடபாரூடர்




## மராட்டியர் கால ஓவியம் (கி.பி. 1850)



இரண்டாம் சரபோஜி மன்னர்

## மராட்டியர் கால ஓவியம் (கி.பி. 1850)



சுஜான்பாய்



## கல்வெட்டுக்கள் கூறும் வரலாற்றுச் செய்திகள்

இக்கோயிலில் இதுவரை சுமார் 100 கல்வெட்டுக்கள் படி எடுக்கப் பெற்றுள்ளன. 'இராஜராஜன் காலம் தொடங்கி சரபோஜி மன்னர் காலம் வரையாக இக்கல்வெட்டுக்கள் உள்ளன. இவை தவிரப் பிற இடங்களிலிருந்து இங்கு வந்து சேர்ந்த துண்டுக் கல்வெட்டுக்களும் உள்ளன. அவற்றில் ஒரு கல்வெட்டில் தந்திவர்ம பல்லவனின் பெயர் காணப்படுகிறது.

திருமகள் போல எனத்தொடங்கும் இராஜராஜனின் மெய்க் கீர்த்தியோடு தான் அவன் கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. முதற்கல்வெட்டில் இராஜராஜசோழன், தான் எடுத்த இந்தக் கற்கோவிலுக்கு தானும், தன் தமக்கையாரும், மனைவியரும் கொடுத்தவற்றோடு பொதுமக்கள் கொடுத்ததையும் சேர்த்து பட்டியலிட்டு கல்லில் வெட்டுமாறு ஆணையிட்டதைப் பதிவுசெய்துள்ளான்.

அனைத்துக் கல்வெட்டுக்களையும் தொகுத்து நோக்கும் போது கீழ்க்குறித்த செய்திகளை நாம் அறிய முடிகிறது.

இக்கோயிலின் நிர்வாக அலுவலராக விளங்கியவர் பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான்.

இராஜராஜனின் இராஜகுருவாக விளங்கியவர் ஈசான சிவபண்டிதர்.

இக்கோயிலின் தலைமை அர்ச்சகராகத் திகழ்ந்தவர் பவணபிடரான்.

இக்கோயிலில் கல்வெட்டுக்களை வெட்டிய அலுவலர் பாளூர்கிழவன்.

கோயிலைக் கட்டிய தலைமைச் சிற்பி வீரசோழன் குஞ்சர மல்லனான இராஜராஜ பெருந்தச்சன், அவனது உதவியாளர்கள் மதுராந்தகனான நித்தவிநோதப்பெருந்தச்சனும், இலத்திச் சடையனான கண்டராதித்தப்பெருந்தச்சனும் ஆவர்.

இக்கோயிலில் தேவாரம் பாட 50 பிடாரர்களும், ஆடல்புரிய 400 ஆடல்மகளிரும் நியமிக்கப் பெற்றிருந்தனர். இவர்களுக்கு வீடும், பொருளும், நெல்லும் அளிக்கப் பெற்றது.

இக்கோயிலில் பணிபுரிந்த பணியாளர்களின் எண்ணிக்கை 1500க்கும் மேலாகும்.

மாமன்னன், அவனது தேவியர்கள், தமக்கையார், உயர் அலுவலர்கள் போன்ற அனைவரும் நூற்றுக்கும் மேற்பட்ட செப்புத் திருமேனிகளைச் செய்தளித்திருந்தனர்.

கோயிலில் நிலையாக இயங்கிய இரண்டு கருவூலங்கள் மன்னனிடமிருந்தும், மக்களிடமிருந்தும் பொருள்களை முதலீடாகப் பெற்று 12½ % வட்டி விகிதத்தில் வணிகர்களுக்கும் ஊர்ச்சபைகளுக்கும் தனியார்களுக்கும் கடன் அளித்து பொது வங்கியாகச் செயல்பட்டது.

மன்னனாலும், மக்களாலும் அளிக்கப்பட்ட பல கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொன், இரத்தின நகைகள் தங்க வெள்ளிப் பாத்திரங்கள் முதலிய அனைத்தும் முறையாக, எடை, மதிப்பு ஆகிய துல்லியமான கணக்குகளோடு பதிவு செய்யப் பெற்றுக் காக்கப் பெற்றது.

இக்கோயிலுக்குச் சொந்தமாகத் தமிழகம் மட்டுமின்றி இலங்கை, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய பிற இடங்களிலும் நிலங்கள் இருந்தன. அதன் வருவாய் ஆண்டுதோறும் இங்கு வந்து சேர்ந்தது. இக்கணக்குகள் துல்லியமாகப் பதிவுபெற்றுள்ளன.

இக்கோயிலில் திருவிளக்குகள் எரிவதற்காக வைக்கப்பெற்ற மூதலீடுகளான கால்நடைச் செல்வங்களால் சோழமண்டலம் முழுவதும் பல ஆட்டுப் பண்ணைகளும், மாட்டுப் பண்ணைகளும் தொடர்ந்து செயல்பட்டன.

போர் வெற்றியால் கிடைத்த பெருஞ்செல்வங்கள் அனைத்தும் இறைவனுக்கே அளிக்கப்பெற்றன.

கவின்கலைகள் அனைத்தும் மன்னனுக்கு அர்ப்பணிக்கப் படாமல் கோயிலில் இறைவனுக்கே அர்ப்பணிக்கப் பெற்றன. அதனால் தான் கலைகளின் வளர்ச்சி இமயமளவு உயர்ந்திருந்தது. கலைஞர்கள் தனிமனிதனின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஆட்படாமல் தங்கள் கலையை பூரணமாக இறைவனுக்கே அர்ப்பணித்தனர்.



கோயில் ஊழியர்களுக்கு அனைத்துச் சலுகைகளும் அளிக்கப் பெற்றிருந்தன. கோயில் பணியாளர்களுக்கு முடிதிருத்தும் நாவிதனுக்குக் கூட **ராஜராஜப்பெரும் நாவிதன்** என்று தனது பெயரையே பட்டமாக அளித்துச் சிறப்பித்த இராஜராஜனின் மாண்பு நிகரற்றது.

தஞ்சை நகரில் இருந்த கோயில்கள், வீதிகள், பேரங்காடிகள், அரண்மனை ஆகியவை பற்றிய பல தகவல்களும். இராஜராஜேஸ்வர நாடகம் நடந்தது பற்றிய குறிப்புகளும். சோழர் கல்வெட்டுக்களில் உள்ளன. பின்வந்த விஜயநகர மன்னர், நாயக்கர்கள், மராட்டியர் சாசனங்களும் அவர்கால அறக்கொடைகள் பற்றியும் விவரிக்கின்றன.

சரபோஜி மன்னர் செய்த திருப்பணிகள் பற்றியும் 108 லிங்கம் பிரதிஷ்டை செய்தது, மராட்டியர் வமிச வரலாறு எழுதியது ஆகியவை பற்றியும் இக்கல்வெட்டுக்களில் செய்திகள் உள்ளன.

## இத்தலத்திற்குரிய பாடல்கள்

கருவூர்த்தேவர் என்ற மெய்யடியார் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடிய பாடல்கள் திருவிசைப்பாவாக 9 ஆம் திருமுறையில் தொகுக்கப் பெற்றுள்ளன. இவர் ராஜராஜேச்சரத்து ஈசனைப் புகழ்ந்து பத்துத் திருப்பாட்டுகள் பாடியுள்ளார்.

உலகெலாம் தொழவந்து எழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்(பு) அச்சோ
அங்ஙனே அழகிதோ அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர் வெண் திங்கள்
இலைகுலாம் பதணத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசராசேச்சரத்து இவர்க்கே (பாடல் 1)

## அருணகிரியாரின் திருப்புகழ்

கந்தவார் குழல்கோதி மாலையைப்பு னைந்து
மஞ்சளா லழகாக மேனியிற் றிமிர்ந்து
கண்டமா லைகளான ஆணிமுத்த ணிந்து தெருவூடே

கண்ட பேரையெலாம் வாவினிற்கொ ணர்ந்து -
வண்பயோ தரபார மேருவைத் திறந்து
கண்களா கியகூர வேலைவிட்டெ றிந்து விலைகூறி

வந்தபேர் களையேகை யாலெடுத்த ணைந்து
கொண்டுதே னிதழூறு வாயைவைத்த ருந்தி
மந்தமா ருதம்வீசு பாயலிற்பு ணர்ந்து மயல் பூணு

மங்கைமா ரநுபோக தீவினைப்ப வங்கள்
மங்கியே கிடுமாறு ஞானவித்தை தந்து வருவாயே
வண்டுலா வியநீப மாலைசுற்றி லங்க

இந்த்ரதா ருவைஞால மீதினிற்கொ ணர்ந்த
சங்கபா ணியனாதி கேசவப்ர சங்கன்
என்றுவாழ் மணிமார்பன் வீரவிக்ரமன்றன் மருகோனே

எண்டிசா முகவேலை ஞாலமுற்று மண்டு
கந்ததா ருகசேனை நீறுபட்டொ துங்க
வென்றுபே ரொளிசேர்ப்ர காசம்விட்டி லங்கு கதிர்வேலா

சந்த்ரசே கரிநாக பூஷணத்தி யண்ட
முண்டநா ரணியால போஜனத்தி யம்பை
தந்தபூ ரணஞான வேள்குறத்தி துஞ்சு மணிமார்பா

சண்டநீ லகலாப வாசியிற் நிகழ்ந்து
கஞ்சன்வா சவன்மேவி வாழ்பதிக்கு யர்ந்த
தஞ்சைமா நகர்ராஜ கோபுரத்த மர்ந்த பெருமாளே

**வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடல்கள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும் புலவரான தண்டபாணி சுவாமிகள் தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள கணபதியார், பெரியசிவனார் பேரில் பதிகங்களும் முருகப் பெருமான் மீது திருப்புகழும் பாடியுள்ளார்.

தஞ்சை மராட்டிய மன்னர் சஹஜி மராட்டி மொழியில் பல கீர்த்தனைகளைப் பிரகதீசுவரப் பெருமான் மீது பாடியுள்ளார்.

முத்துச்சாமி தீட்சிதரும், சின்னையா, பொன்னையா, சிவானந்தம் வடிவேலு ஆகிய தஞ்சை நால்வரும் கிருதிகள் பாடியுள்ளனர்.




**இராஜராஜன் உருவச்சிலை**

இராஜராஜன் காலத்தில் பெரிய கோயிலின் நிர்வாக அலுவலராக (ஸ்ரீகார்யம்) இருந்த மூவேந்தவேளான், இராஜராஜன், அவனது பட்டத்தரசி லோகமாதேவி ஆகிய இருவரது உருவச்சிலைகளையும் செம்பினால் செய்து இக்கோயிலுக்கு அளித்தான். அவற்றிற்கு அணிகலன்களும் அளித்தார். இராஜராஜன் இறந்த பிறகு அவனைத் தெய்வமாகக் கருதி அச்செப்புச் சிலை முன்பு ஒரு திருவிளக்கும் விபூதிமடல் ஒன்றும் வைத்து தென்னவன்மூவேந்தவேளார் வணங்கினார். அந்தச்சிலை சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இக்கோயிலிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் கௌதம் சாராபாய் கலைக்கூடத்தில் உள்ளது. பெரியகோயிலில் தற்போது உள்ள சிலையின் பீடத்தில் "பெரிய கோயில் ராசா ராசேந்திர சோழராச" என்று எழுதப்பெற்றுள்ளது. இது 20 ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்ற செப்புப் படிமமாகும்.

**கலசம்**

ஸ்ரீவிமானத்தின் உச்சியிலுள்ள கலசம் இரண்டு மனிதர்களின் மொத்த உயரத்தை விடக் கூடுதலானது. இராஜராஜன் 3083 பலம் எடையுடைய செப்புக் கலசமாகச் செய்து 2926 1/2 கழஞ்சு தங்கம் கொண்டு முலாம் பூசினான். தற்போது இக்கலசத்தில் முதல் சரபோஜி மன்னர் 1729-இல் கும்பாபிஷேகம் செய்த விவரம் காணப்பெறுகிறது.




கலசம் இடம் பெற்றுள்ள சிகரம் ஒரு கல்லால் ஆனது அல்ல

## பஞ்சதேக மூர்த்தி

மகாசதாசிவனை முழுமுதற் கடவுளாகப் போற்றிய இராஜராஜன் பஞ்சதேகமூர்த்தி என்ற ஒரு செப்புத் திருமேனியை இக்கோயிலில் அமைத்து வழிபட்டான். இதன் அமைப்பு, அளவுகள் சிறப்புப் பற்றிக் கல்வெட்டொன்று கூறுகிறது. வேறு எங்கும் இத்தகையதொரு சிற்பம் இருந்ததில்லை. தற்போது இச்சிற்பம் மறைந்துவிட்டது.

வாயில் நிலைகளில் எட்டு மங்கலச் சின்னங்களை அமைப்பது பழைய மரபாகும். கருவறையின் அர்த்த மண்டபத்து வடபுற வாயில் நிலையில் மேலே காட்டப்பெற்றுள்ள எட்டுச் சின்னங்களும் உள்ளன. திருச்சுற்று மாளிகையின் வடபுற வாயிலான அணுக்கன் வாயில் வழியாகவே இராஜராஜன் கருவறைக்குச் சென்றிருக்க வேண்டும். எனவேதான் மன்னன் நுழையும் வாயில் மங்கல வாயிலாக அமைக்கப் பெற்றுள்ளது.



பஞ்சதேக மூர்த்தி கல்வெட்டில் கூறப்பெற்றுள்ளவாறு வரையப்பெற்ற ஓவியம்



## ஆடல் வல்லான்

இராஜராஜன் எடுத்த இந்தச் செப்புத் திருமேனியைத் 'தெட்சிணமேரு விடங்கரான ஆடவல்லார்' என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேலைச் சாளுக்கியர்களை வென்ற இராஜராஜன் தங்கத்தில் மலர்கள் செய்து இவர் பாதத்தில் இட்டு வழிபட்டான். இதன் பேரழகைப் பார்த்தால்,

"குனிந்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

என்னும் அப்பர் சுவாமிகளின் பாடல்தான் நினைவிற்கு வரும்.

## சுப்பிரமணியர் ஆலயச் சிற்பங்கள்



சுப்பிரமணியர் ஆலயம் நுணுக்கமான சிற்ப வேலைப்பாடு கொண்டது. கருவறையின் பின்புறம் வள்ளி திருமணக் காட்சிகள் உள்ளன. வடபுறம் உள்ள மகிஷா சுரமர்த்தினி எனும் துர்க்கையின் சிற்பம் சிறப்புடையதாகும்.

முதற்தளத்தின் விளிம்பாகிய கபோதகத்தில் முருகப் பெருமானின் சிற்றுருவ சிற்பங்கள் பல உள்ளன. மயில், சிம்மம், யானை, கோழி, அசுரன் முதலிய வாகனங்களோடும், குழந்தை வடிவிலும், 4,6,12,16 கரங்களோடும், பல்வேறு கோல நிலைகளில் முருகப் பெருமான் வடிவங்கள் உள்ளன. கீழ்நிலையில் முதலையின் பிடியில் சிக்குண்ட யானை ஆதி மூலத்தை அழைப்பதும், கருடவாகனராக திருமால் தன் சக்கரம் கொண்டு காத்ததும் - ஆகிய காட்சிச் சிற்பம் உள்ளது. இவை மிக நேர்த்தியான சிற்ப வேலைப்பாடுடையவையாகும்.

முன் மண்டபத்துப் படிக்கட்டுகளில் உள்ள யானை, தேர்ச்சக்கரங்கள், பாயும் குதிரைகள் ஆகியவை நுணுக்கமான வேலைப்பாடுடையவையாகும். மகாமண்டபத்திலுள்ள துவாரபாலகர் சிற்பம் கருப்புக்கல்லால் மிகுந்த எழிலோடு காணப்படுகிறது. இக்கோயிலையும் சிற்பங்களையும் படைத்தவன் "அதிரவீசி ஆசாரி" எனும் சிற்பியே என்பதை இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

## வராகி அம்மன்

திருச்சுற்று மாளிகைப் பத்தியில் முன்னாளில் பிராம்மி, வைஷ்ணவி, கௌமாரி, வராகி, இந்திராணி, மாகேஸ்வரி, சாமுண்டி என்னும் சப்தமாதர் எழுவரும் மகேசன் கணபதியாரோடு கோயில் கொண்டு திகழ்ந்தனர். பின்னாளில் மற்ற தெய்வத் திருமேனிகளெல்லாம் மறைந்து விட்டபோதும் திருமாலின் வராக அவதாரத்தின் சக்தி அம்சமான வராகி அம்மன் திருமேனி மட்டும் தெற்குப் பிரகாரத்தில் அருள்வழங்கி நிற்கிறது.

இராஜராஜன் உலோகமா தேவி செப்புப்பிரதிமங்கள்
தற்போது அகமதாபாத்தில் உள்ளவை

**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை